# தமிழ்நாடு அரசு

# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

**பிரிவு** : TNPSC **ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு** - 4 (**தொகுதி** 4 & **வி ஏ ஓ**)

**பாடம்** : **வரலாறு**

**பகுதி** : இந்திய பண்பாட்டின் இயல்புகள்

©**காப்புரிமை** :

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் **ஒருங்கிணைந்த குடிமை பணிகள் தேர்வு** - 4 (**தொகுதி** 4 & **வி ஏ ஓ**) க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்**,

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# வரலாறு

## இந்திய பண்பாட்டின் இயல்புகள்-வேற்றுமையில் ஒற்றுமை, இனம்,நிறம்,மொழி, பழக்க வழக்கங்கள், இந்தியா மத சார்பற்ற நாடு.

Ø இந்தியா, மனித இனத்தை பற்றி படிக்ககூடிய அருங்காட்சியகமாகவும், ஆய்வகமாகவும் திகழ்கிறது. எனவே, மனித இனங்களின் **அருங்காட்சியகம்** என சிறப்புடன் அழைக்கப்படுகிறது.

Ø இந்தியாவின் பழமையான மதம் வேத சமயமாகும்(இந்துமதம்).

Ø கி.பி.முதலாம் நூற்றாண்டில் கிறிஸ்தவமதம் ஏசுவின் சீடர் **புனித தாமஸ்** என்பவரால் இந்தியாவில் பரப்பப்பட்டது.

Ø இந்தியாவை விட்டு வெளியேற்றப்பட்ட பாரசீகர்களால் **ஜொராஸ்டிய மதம்** இந்தியாவில் பரப்பப்பட்டது.

Ø இஸ்லாமியர்கள் இந்தியாவில் இஸ்லாம் மதத்தை வேரூன்ற செய்தனர். இம்மதங்களைத் தவிர **புத்தம்**, **சமணம்**, **சீக்கிய மதங்களும்** இந்தியாவில் தோன்றின. இருந்த போதிலும், நமது சமய சகிப்புத்தன்மையால் சமய பூசல்களுக்கு இடமளிப்பதில்லை.

## மொழி

Ø இந்தியாவில் ஏறத்தாழ 845 **மொழிகள்** பேசப்படுகின்றன. அவற்றில் 22 **மொழிகள் அரசாங்கத்தால்** அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

Ø **தேவநாகிரி** வடிவிலான இந்தி அலுவல் மொழியாக தேர்வு செய்யப்பட்டுள்ளது.

Ø **ஆங்கிலம்** அலுவலக தொடர்பு மொழியாக பயன்படுத்தப்படுகிறது.

## இலக்கியம்

Ø **இராமாயணமும்**, **மகாபாரதமும்** இருபெரும் இதிகாசங்களாகும்.

Ø **திருவள்ளுவரால்** இயற்றப்பட்ட **திருக்குறள்** தமிழில் மிகச்சிறந்த நூலாகக் கருதப்படுகிறது.

Ø **பகவத்கீதை** இந்துக்களின் புனித நூலாகும்.

Ø **உமறுப்புலவரின் சீறாப்புராணம் இறைதூதர் முகம்மது நபியின்** வாழ்க்கையைப்பற்றிக் கூறுகிறது.

Ø **வீரமாமுனிவரால்** இயற்றப்பட்ட **தேம்பாவணி** கிறித்தவ மதத்துடன் தொடர்புடையது.

**விழாக்கள்**

Ø புத்த மதத்தினர் **புத்த பூர்ணிமாவையும்** சமணர்கள் **மகாவீர் ஜெயந்தியையும்** சீக்கியர்கள் **குருநானக் ஜெயந்தியையும்** கொண்டாடுகின்றனர்.

**பழக்க வழக்கங்கள் மற்றும் பாரம்பரியம்**

Ø இந்திய பாரம்பரியம், விருந்தோம்பல், ஈகை, நட்பு, அன்பு, சுயநலமற்ற தன்மை, நீதி, நன்னடத்தை, ஒழுக்கம், உண்மை, அமைதி, கருணை, சமய உணர்வு, பெற்றோர் மற்றும் பெரியோரை மதித்தல் மற்றும் சகிப்புத்தன்மையை வலியுறுத்துகிறது. மேற்கூறிய பண்புகள் வேற்றுமைகளை மறந்து மக்கள் ஒற்றுமையுடன் வாழ உதவுகின்றன.

**கலை மற்றும் கட்டடக்கலை**

Ø கட்டடக்கலையில் இந்தியா புகழ்பெற்றது.

Ø **அஜந்தா மற்றும் எல்லோரா** ஓவியங்கள் உலகப் புகழ் பெற்றவை.

Ø **காந்தாரக்கலையும் சிற்பங்களும்** இந்தியாவின் சிற்பக்கலையின் பெருமையை பறைசாற்றுகின்றன.

**<u>இசை மற்றும் நடனம்</u>**

Ø **பரத நாட்டியம்**, **குச்சுப்புடி**, **கதக்களி**, **மணிப்புரி**, **மற்றும் ஒடிசி** போன்றவை இந்தியாவின் புகழ்பெற்ற நடனக்கலைகள் ஆகும்.

**<u>தேசிய ஒருமைப்பாடு</u>**

Ø இந்தியர்கள் அனைவரும் சகோதர சகோதரிகள் என்ற எண்ணம் மற்றும் உணர்வு இந்திய ஒருமைப்பாட்டை வளர்க்க பெரிதும் உதவுகின்றன.

**<u>பகுத்தறிவாளர்களின் எழுச்சி</u>**

**<u>இராஜாராம் மோகன்ராய்</u>**

Ø 1972**ல்** வங்காளத்தில் **கூக்ளி** மாவட்டத்தில் பிறந்தார். 1815ல் **ஆத்மிய சபையை** நிறுவினார். பின்னர் 1828 ல் இந்த சபையே **பிரம்ம சமாஜமாக** வளர்ச்சி பெற்றது. இந்த அமைப்பின் மூலம் கடவுள் ஒருவரே என்று இராஜாராம் மோகன்ராய் பிரச்சாரம் செய்தார்.

Ø **உபநிடதங்கள்**, **விவிலியம்**, **குர்ரான்** போன்ற சமய நூல்களின் கருத்துக்களை ஒன்றிணைத்து பல்வேறு சமயத்தினரிடம் ஒற்றுமை ஏற்படுத்த முயற்சித்தார்.

Ø ஆத்மிய சபையின் பணியை **மகரிஷி திபேந்திரநாத் தாகூர்** (இரவீந்திரநாத் தாகூரின் தந்தை) இவர்தான் பிரம்ம சமாஜம் என்று இச்சபைக்கு பெயர் மாற்றம் செய்தார்.

Ø இந்தியாவின் தலைசிறந்த சமூக அமைப்பாக **பிரம்மசமாஜத்தை** உருவாக்கினார்.

Ø 1829ல் வில்லியம் பெண்டிங் பிரபு சதி முறையை ஒழிக்க முன்வந்தபோது இராஜாராம் மோகன்ராய் அவருக்கு உறுதுணையாக நின்றார்.

Ø குழந்தைத் திருமணத்தையும், பெண்சிசு கொலையையும், கடுமையாக எதிர்த்தார்.

Ø 1817ல் சமய பரப்பாளரான **டேவிட்ஹேர்** என்பவருடன் இணைந்து கல்கத்தாவில் **இந்துக் கல்லூரியை** (இதுவே தற்போதைய கல்கத்தா மாநில கல்லூரி) நிறுவினார்.

Ø இராஜாராம் மோகன்ராய் வங்காள மொழியில் வெளிவந்த முதலாவது வார இதழான **சம்வாத்கௌமுதியை** தொடங்கினார்.

Ø பாரசீக வார இதழான **மீரத் உல் அக்பார்** என்பதற்கு ஆசிரியராகவும் திகழ்ந்தார்.

Ø 1833-**ல்** இங்கிலாந்திலுள்ள **பிரிஸ்டல்** என்ற இடத்தில் அவர் மறைந்தார்.

## ஹென்றி விவியன் டெரோசியோ

Ø இளம் வங்காள இயக்கத்தை நிறுவினார்.

Ø கல்கத்தா இந்து கல்லூரியில் ஆசிரியராக பணிபுரிந்தார்.

Ø 1833ல் காலரா நோய்கண்டு இளம் வயதிலேயே இறந்தார்.

Ø அவரது சீடர்கள் **டெரோசியன்கள்** என்றும், அவரது இயக்கம் **இளம் வங்காள இயக்கம்** என்றும் அழைக்கப்பட்டது.

Ø பெண்ணுரிமை, பெண் கல்வியை பெரிதும் ஆதரித்தார்.

Ø உருவ வழிபாடு, ஜாதியின்மை, மூடநம்பிக்கைகள் ஆகியவற்றிற்கு எதிராக பல்வேறு அமைப்புகளை ஏற்படுத்தியும், விவாதங்கள் நடத்தியும் சீர்திருத்தத்தில் ஈடுபட்டனர்.

## சுவாமி தயானந்த சரஸ்வதி

Ø 1875 **ஆம்** ஆண்டு பம்பாயில் **சுவாமி தயானந்தசரஸ்வதி** ஆரிய சமாஜத்தை தோற்றுவித்தார்.

Ø குஜராத்தின் **கத்தியவார்** பகுதியில் 1824ம் ஆண்டு பிறந்தார்.

Ø வேதங்கள் உண்மையான அறிவுக்கு அடிப்படை என்று நம்பினார்

Ø **வேதகாலத்திற்கு திரும்புங்கள்** என்பதே அவரது முழக்கமாகும்.

Ø உருவ வழிபாடு, குழந்தை திருமணம், பிறப்பின் அடிப்படையிலான ஜாதிமுறை போன்றவற்றை அவர் எதிர்த்தார். கலப்பு மணத்தையும், விதவை மறுமணத்தையும் ஆதரித்தார்.

Ø பிற சமயங்களுக்கு மதம் மாறியவர்களை மீண்டும் இந்து அமைப்புகளுக்கு கொண்டு வரும் நோக்கத்துடன் **சுத்தி இயக்கத்தை** தொடங்கினார்.

Ø அவரது கருத்துக்களை உள்ளடக்கிய **சத்தியார்த்த பிரகாஷ்** என்ற நூலையும் எழுதினார்.

Ø பம்பாயில் தோற்றுவிக்கப்பட்ட போதிலும், ஆரியசமாஜம் இந்தியாவின் பல பகுதிகளில் தனது தாக்கத்தை ஏற்படுத்தியது.

Ø கல்வி வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டது.

Ø 1886ல் முதலாவது **தயானந்த ஆங்கிலோ வேதபள்ளி** லாகூரில் நிறுவப்பட்டது.

Ø லாலா லஜபதிராய் அவர்களும் ஆரிய சமாஜத்தை சேர்ந்தவரே.

**<u>பிரார்த்தனை சமாஜம்</u>**

Ø 1867ல் பம்பாயில் **டாக்டர் ஆத்மாராம் பாண்டுரங்** என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது. இது பிரம்ம சமாஜத்திலிருந்து உதயமானதாகும்.

Ø இந்து சமயத்திற்குள்ளேயே சீர்திருத்தங்களைக் கொண்டு வருவது இதன் நோக்கம்.

Ø சமபந்தி கலப்புமணம், விதவைகள் மறுமணம், பெண்கள் மற்றும் தாழ்த்தப்பட்டோர் மேம்பாடு போன்றவற்றில் அதிக கவனம் செலுத்தியது.

Ø 1870**ல் நீதிபதி எம்.ஜி.ராணடே**, **ஆர்.ஜி.பண்டார்கர்** இருவரும் இதில் சேர்ந்து இந்த இயக்கத்திற்கு மேலும் வலிமை சேர்த்தனர்.

Ø நீதிபதி இராணடே தக்காண கல்விக் கழகத்தையும் போற்றி வளர்த்தார்.

**சுவாமி விவேகானந்தர்** (1863 - 1902)

- இயற்பெயர் நரேந்திரநாத் தத்தா.
- ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரின் புகழ்பெற்ற சீடர்.
- ஸ்காட்டிஷ் சர்ச் கல்லூரியில் பயின்றார்.
- 1886ல் துறவறம் பூண்டார்.
- விவேகானந்தர் என்று அழைக்கப்பட்டார்.
- 1893ல் செப்டம்பரில் சிகாகோ (அமெரிக்கா)வில் நடைபெற்ற உலக சமயங்களின் மாநாட்டில் கலந்துகொண்டு இந்தியா மற்றும் இந்து சமயத்தின் புகழை உலகறியச் செய்தார்.
- மனிதனுக்கு செய்யும் சேவையே கடவுளுக்கு ஆற்றும் சேவை என்று அவர் திடமாக நம்பினார்.
- 1897ல் ஹவுராவில் உள்ள பேலூர் என்ற இடத்தில் **இராமகிருஷ்ண இயக்கத்தை** தோற்றுவித்தார்.
- இது ஒரு சமூக சேவை மற்றும் அறக்கொடை அமைப்பாகும்.

**பிரம்மஞானசபை**

- 1875ல் இரஷ்யாவை சேர்ந்த **பிளாவட்ஸ்கி அம்மையார்** மற்றும் அமெரிக்கா **கர்னல் ஹென்றி ஸ்டீல் ஆல்காட்** என்ற இருவராலும் நியூயார்க்கில் (அமெரிக்கா) பிரம்ம ஞானசபை நிறுவப்பட்டது.
- இன, நிற, சமய பாகுபாடுகள் இன்றி உலக சகோதரத்துவத்தை ஏற்படுத்துவதும், பண்டைய சமய மற்றும் தத்துவங்களை ஆய்வு செய்வதும் அவர்களது முக்கிய நோக்கங்களாகும்.
- 1882ல் **சென்னை அடையாறில்** தங்களது தலைமையிடத்தை நிறுவினர்.
- 1893ல் **திருமதி.அன்னிபெசண்ட் அம்மையார்** இந்தியாவிற்கு வந்து இச்சபையின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.
- **மதன்மோகன் மாளவியாவுடன்** இணைந்து பனாரஸில் **மத்திய இந்திய பள்ளியை** நிறுவினார்.

Ø பின்னர் அது பனாரஸ் இந்து பல்கலைக்கழகமாக வளர்ச்சி பெற்றது.

**பண்டித ஈஸ்வர சந்திர வித்யாசாகர்**

Ø சிறந்த கல்வியாளர்.

Ø சமூக சீர்திருத்தவாதி.

Ø 1820ல் **வங்காளத்தில்** பிறந்தார்.

Ø வில்லியம் கோட்டை கல்லூரியில் வங்காள மொழி துறையின் தலைமை பண்டிதர் ஆனார்.

Ø இந்திய சமுதாயத்தில் கல்வியை பரப்புவதின் மூலமே சீர்திருத்தம் கொண்டு வரமுடியும் என நம்பினார்.

Ø **பெதூன்பள்ளியை** நிறுவ பெதூன் என்பவருக்கு உறுதுணையாக இருந்தார்.

Ø கல்வியை பரப்புவதற்கு அவர் மேற்கொண்ட முயற்சிகளை பாராட்டும் விதத்தில் அவருக்கு **வித்யாசாகர்** என்ற பட்டம் வழங்கப்பட்டது.

**ஜோதிபா கோவிந்தபூலே**

Ø மகாராஷ்டிரத்தில் ஒரு தாழ்த்தப்பட்ட குடும்பத்தை சேர்ந்தவர்.

Ø ஜாதி ஆதிக்கத்திற்கும் பிராமணிய சக்திகளுக்கும் எதிராக தனது வாழ்நாள் முழுவதும் நீண்ட போராட்டத்தை மேற்கொண்டார்.

Ø 1873ல் ஜாதிமுறையை எதிர்த்து போராட **சத்தியசோதக் சமாஜம்** என்ற அமைப்பை தோற்றுவித்தார்.

Ø இவரும், இவருடைய மனைவியும் இணைந்து 1851ல் பூனாவில் **முதலாவது பெண்கள் பள்ளியை** நிறுவினர்.

**இராமலிங்கஅடிகள்**

- 1823ல் பிறந்தார்.
- ஆன்மீக வாழ்க்கையில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட இவர் வடலூருக்கு அருகில் 1858ல் கருங்குழி என்ற இடத்திற்கு சென்றார். பின்னாளில் வடலூரில் தனது இருப்பிடத்தை அமைத்துக் கொண்டார்
- 1865ல் **சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தை** நிறுவினார்.
- **திருவருட்பா** என்ற நூலை இயற்றினார்.
- மற்ற படைப்புக்கள் - **மனுமுறை கண்ட வாசகம்**, **ஜீவகாருண்யம்**,
- 1870 இல் வடலூருக்கு அருகில் உள்ள மேட்டுக்குப்பம் என்ற இடத்திற்கு சென்று 1872 **இல் சத்தியஞானசபையை** கட்டத் தொடங்கினார்.
- கடவுளை ஜோதி வடிவில் வழிபடலாம் என்று மக்களுக்கு எடுத்துக் கூறினார்.

**ஸ்ரீவைகுண்ட சுவாமிகள்**

- 1809 ஆம் ஆண்டு தமிழ்நாடு கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள சாமித்தோப்பு என்ற ஊரில் பிறந்தார்.
- இயற்பெயர் - முடிசூடும் பெருமாள்.
- முத்துக்குட்டி என்று அழைக்கப்பட்டார்.
- ஜாதிமுறை மற்றும் தீண்டாமைக்கு எதிராக போராடினார்.
- அவரது போதனைகள் காலவாக்கில் **அய்யா வழி** என பெயர்பெற்றது.
- தென்திருவாங்கூர் மற்றும் தெற்கு திருநெல்வேலி பகுதிகளில் இது வேகமாக பரவியது.
- இவர் இயற்றிய சமய நூல்கள் - **அகில திரட்டு அம்மாணை**, **அருள்நூல்**,

Ø பல இடங்களில் **நிழல்தங்கல்** என்ற வழிபாட்டு தளங்கள் கட்டப்பட்டன.

**ஈ.வே.ரா. பெரியார்**

Ø சிறந்த சீர்திருத்தவாதி.

Ø 1921ல் கள்ளுக்கடை மறியலின் போது தன் சொந்த தோப்பிலேயே 1000 தென்னை மரங்களை வெட்டி வீழ்த்தினார்.

Ø 1924ல் வைக்கம் அறப்போராட்டத்தில் கலந்து கொண்டார்.

Ø வ.வே.சு அய்யரின் சேரன்மாதேவி குருகுலத்தில் வருணாசிரம நடவடிக்கையை எதிர்த்தார்.

Ø 1925**ல் சுயமரியாதை இயக்கத்தை** தொடங்கினார்.

Ø திராவிடர்களின் முன்னேற்றம், பிராமணிய ஆதிக்கத்திற்கு எதிர்ப்பு, இந்து சமய மக்களின் வாழ்வில் அவர்கள் ஏற்படுத்தியிருந்த கட்டுப்பாடுகளை உடைத்தெறிதல் போன்றவையே சுயமரியாதை இயக்கத்தின் முக்கிய நோக்கங்கள்.

Ø கலப்புத் திருமணத்தை ஆதரித்தார்.

Ø சடங்குகள் இல்லாத பல திருமணங்களை அவரே முன் நின்று நடத்திவைத்தார். அத்தகைய திருமணம் **சுயமரியாதை திருமணம்** என்று அழைக்கப்பட்டது.

Ø **குடியரசு**, **புரட்சி**, **விடுதலை** போன்ற தமிழ் ஏடுகளை தொடங்கி அவற்றின் மூலம் தனது கருத்துகளை பெரியார் பரப்பினார்.

Ø பெரியாரின் அரும்பணிகளை பாராட்டி தமிழ்நாடு பெண்கள் மாநாட்டில் 1938ம் ஆண்டு ஈ.வே.ராவுக்கு **பெரியார் பட்டம்** வழங்கப்பட்டது.

Ø 27.06.1970 ம் ஆண்டு ஐநாவின் யுநெஸ்கோ நிறுவனம் தந்தை பெரியாரை **தெற்கு ஆசியாவின் சாக்ரடீஸ்** என பாராட்டி போற்றியது.

**முஸ்லீம் சீர்திருத்த இயக்கங்கள்**

Ø தொடக்கத்தில் மேலை நாட்டு கல்வியை முஸ்லீம்கள் புறக்கணித்ததால் அவர்களிடையே சீர்திருத்த இயக்கங்கள் சற்று தாமதமாகவே தோன்றின.

Ø அத்தகைய முதல் முயற்சி 1863ல் கல்கத்தாவில் தோற்றுவிக்கப்பட்ட **முகமதிய இலக்கிய கழகம்** ஆகும்.

Ø ஆங்கில கல்வியையும், மேலைநாட்டு அறிவியலையும் பரப்புவதே இதன் முக்கிய நோக்கம்

**அலிகார் இயக்கம்**

Ø தோற்றுவித்தவர் - **சர் சையது அகமதுகான்** (1817 - 1898)

Ø முஸ்லீம்களின் சமூக மற்’றும் கல்வி மேம்பாட்டுக்காக தோற்றுவிக்கப்பட்டது.

Ø முஸ்லீம்களிடையே தாராள கருத்துக்களை பரப்புவதற்காக 1866ல் முகமதியர் கல்விக்கழகத்தை தோற்றுவித்தார்.

Ø ஆங்கில கல்விக்கென 1875ல் அலிகாரில் ஒரு பள்ளியை நிறுவினார். இதுவே பின்னர் முகமதிய ஆங்கிலேய கீழ்த்திசை கல்லூரியாகவும் தற்போதைய **அலிகார் முஸ்லீம் பல்கலைக்கழகமாகவும்** வளர்ச்சியடைந்தது.

**தியோபாண்ட் பிரிவு**

Ø முஸ்லீம் உலேமாக்களின் வைதீக பிரிவினரால் தோற்றுவிக்கப்பட்டதே தியோபாண்ட் இயக்கம்.

Ø இது ஒரு மறுமலர்ச்சி இயக்கம்.

Ø **இதன் இரண்டு முக்கிய குறிக்கோள்கள்**

1. குர்ரான் மற்றும் ஹாடிஸ் இல் உள்ளவாறு இஸ்லாமிய போதனைகளை முஸ்லீம்களிடையே பரப்புவது.

2. அந்நிய ஆட்சியாளர்களுக்கு எதிராக ஜிகாத் என்ற உரிமை போராட்டத்தை தொடர்வது.

Ø **முகமதுஉல்ஹாசன்** என்ற புதிய தலைவர் இப்பிரிவின் சமய கருத்துக்களில் அரசியல் மற்றும் அறிவார்ந்த சிந்தனைகளை புகுத்தினார்.

**<u>சீக்கிய சீர்திருத்த இயக்கம்</u>**

Ø பஞ்சாப்பில் சீக்கிய சீர்திருத்த இயக்கங்கள் தோன்றின.

Ø **பாபா தயாள் தாஸ்** என்பவர் **நிரங்காரி** இயக்கத்தை தோற்றுவித்தார்.

Ø கடவுளை உருவமற்றவராக வழிபடவேண்டும் என்று கூறினார்.

Ø **பாபாராம்சிங் நாம்தாரி** இயக்கத்தை நிறுவினார்.

**<u>பார்சி சீர்திருத்த இயக்கம்</u>**

Ø 1851ல் **பிர்துஞ்சி நவுரோஜி மற்றும் எஸ்.எஸ்.பெங்காலி** என்பவர்களால் பம்பாயில் பார்சி சமய சீர்திருத்த சங்கம் தோற்றுவிக்கப்பட்டது.

Ø பெண் கல்வியை அவர்கள் ஆதரித்தனர்.

Ø தங்கள் சமூகத்தில் நிலவிய திருமண சடங்குகளில் சீர்திருத்தம் கொண்டு வர அவர்கள் விரும்பினர்.

Ø **ஜகத் மித்ரா** என்ற மாத இதழை **நவ்ரோஜி** நடத்தி வந்தார்.

Ø 20-ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் பார்சிகளில் பெரும்பாலானோர் முக்கியப் பொறுப்புகளை ஏற்று இந்தியாவின் வளர்ச்சிக்கு சிறப்பான தொண்டினை ஆற்றினர்.

*****